ஒன்றிய பழைய கண்மாயைப் பற்றியதாகும். ரூ. 32,000 மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது. இதை ஆழப்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. மராமத்துதான் நடைபெற்று வருகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : மதுரை மாவட்டத்தில் மூன்று நான்கு கண்மாய்கள் குறித்து இம்மாதிரி எழுதிக்கொடுத்திருந்தேன் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரிடம். அவர்கள் சில காரணங்கள் தேவை என்று, மூன்று தடவை அல்லது இரண்டு தடவை அங்கு விவசாயம் சரருபடி செய்ய முடியாமல் சாவியாகி இருக்கவேண்டும் என்று இப்படி மூன்று நான்கு காரணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி அரசாங்க ஆணை ஏதாவது இருக்கிறதா என்பதை அறியத்தான் நான் அக்கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிந்து தெரிவிக்கிறேன்.

மஞ்சலாற்றின் குறுக்கே மதகுப்பொறி

*** 490. வினு—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுக்கா அசிக்காடு மறையூர் கிராமங்களுக் கிடையே மஞ்சலாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு என். கிட்டப்பா : மாயூரம் தாலுக்கா அசிக்காடு மறையூர் கிராமங்களுக்கிடையே மஞ்சளாற்றின் குறுக்கே ரெகுலேட்டர் அமைத்து அங்குள்ள விவசாயிகளுக்கு பயன்தரத்தக்க விதத்தில் உள்ள நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை என்று பதில் தெரிவித்தேன். ஆனால் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,298.33 லட்சமாகும். இந்தத் திட்டம் 1972-73 முதல் நான்கு வருடக் காலத்தில் செயல்படுத்தப்படும். மறையூர் அணையை

1973 நவம்பர் 29]

மதகாக மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்ட ரூ. 90,000 மதிப்புள்ள திட்டம் விரைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டு 1973-74-ம் ஆண்டு நிறைவேற்றப்படும்.

Applications for new cement factories

* 491 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Government have recommended and forwarded to the Government of India any application for the starting of new cement factories in this State ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : திருச்சி போன்ற மாவட்டங்களில் அதிகமாக ஜிப்சம் கிடைப்பதால் அதை உபயோகப்படுத்தி தமிழ்நாட்டில் அதிகப்படியாக சிமென்ட் உற்பத்தி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யுமா? தனிப்பட்டவர்கள் சிமென்ட் தொழிற்சாலைகள் தொடங்க சர்க்கார் அனுமதி கோரி வந்திருக்கிறார்களா? அதுபற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு ஏதாவது செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய சிமென்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்போது அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறோம். இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : புதுத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு இப்போது ஆலோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருக்கிற ஆலைகளை, அரசு நடத்துகிற ஆலைகளை எக்ஸ்பான்ட் செய்யும் திட்டமிருக்கிறதா? அப்படியானால் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நேற்றே அதுபற்றி இங்கே விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அனுமதி தரப்பட்டதில் இப்போது நாம் எக்ஸ்பான்ஷன் வேலைகள் தொடங்குவதற்கு இருக்கிறோம்.